රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය இணைந்த சேவைகள் பிரிவு COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය தொலைபேசி: (94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்: (94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணைத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: PA/CS/POLICY/வ.இ.மா. 2018
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2017.09.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**2018 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்கள் – (இணைந்த சேவைகள்)**
**அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை, அபிவிருத்தி அலுவலர் சேவை, இலங்கை அரச நூலகர் சேவை, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, இணைந்த சாரதி சேவை.**
**அலுவலக பணியாளர் சேவை**

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களை 2018.01.01 ஆம் திகதியன்று அல்லது அலுவலர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் அனுமதிக்கின்றேன். இது பற்றி அமைச்சின் / திணைக்களத்தின் உரிய அலுவலர்களிடம் அறிவித்து உரிய தினத்தில் புதிய சேவை நிலையத்தில் கடமையினை பொறுப்பேற்குமாறு அவர்களுக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறேன். அரசாங்க சேவைகள் ஆணைக்குழு / இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களுக்கான விசாரணைகள் ஆணைக்குழு / தேர்தல்கள் ஆணைக்குழு ஆகிய சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களின் இடமாற்றங்கள் சம்பந்தமாக நிறுவனத் தலைவர்களின் இணக்கப்பாட்டுடனேயே மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை அறியத் தருகிறேன்.

02. தற்போது பணியாற்றும் சேவை நிலையங்களில் உரிய காலத்தைப் பூர்த்தி செய்திராத அலுவலர்களுக்கு இந்த வருடாந்த இடமாற்றத்திற்காக பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது. உரிய காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு தாபன விதிக் கோவையின் நடைமுறைகளுக்கு அமைவாக பிரயாணச் செலவு வழங்குதல் வேண்டும். எனினும் தங்கியிருத்தல் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

03. இணைந்த சேவை இடமாற்றக் கட்டளைகளுக்கு அமைவாக யாதேனும் அலுவலர் ஒருவருக்கு உங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் நிறுவியுள்ள உள்ளக இடமாற்றக் குழுவினாலும் உள்ளக இடமாற்றங்களுக்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின் அங்கு இணைந்த சேவை இடமாற்றக் கட்டளையே அமுல்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அலுவலர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அமைச்சுக்கள் / திணைக்களத் தேவைகளின் அடிப்படையில் அமைச்சுக்கள் / திணைக்களத்தினால்

வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைகளே அமுல்படுத்தப்படல் வேண்டுமென நீங்கள் கருதும் பட்சத்தில் இக்கடிதத்தின் 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் உங்களது சிபாரிசுடன் குறித்த வேண்டுகோள் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதாகும்.

04. இவ்விடமாற்றங்களை மேற்கொள்ளும் போது இடமாற்றச் சபையினால் பின்பற்றப்பட்ட இடமாற்ற நடைமுறை 2017.06.30 ஆம் திகதிய இலக்கம் 03/2017 உடைய இணைந்த சேவைகள் சுற்றறிக்கையுடன் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் காணப்படும் இடமாற்றக் கட்டளைகள், இடமாற்றம் கோரியுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் அறியப்படுத்துதல் வேண்டும். இந்த இடமாற்ற கட்டளைக்கு உட்படுகின்ற அலுவலர் ஒருவருக்கு 2017.12.31 ஆம் திகதி வரையில் பிற்போடப்பட்ட இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள இடமாற்றமாக இருப்பின் அவ்வாறான அலுவலர் ஒருவருக்கு மீண்டும் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற கட்டளை ஒன்றின் மூலம் வேறொரு இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்டிருப்பின் அதன்போது முன்னர் வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளை வலுவிழந்துவிடும் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்.

05. இடமாற்ற நடைமுறையில் அல்லது இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 03/2017 இல் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் நடைமுறை ஒழுங்கு விதிகள் (தொகுதி இலக்கம் 1) இன் XVIII அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக <u>மற்றும் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 03/2017 இன் 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்</u> தமது இடமாற்ற கோரிக்கைகள் தொடர்பாக வருடாந்த இடமாற்றக் குழுவின் கவனத்திற்கு உட்பட்டிராத பட்சத்தில் மாத்திரம் வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வு குழுவிடம் கருத்துக்களை சமர்ப்பிக்க முடியும். <u>அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/APL/07/14/2013 மற்றும் 2013.09.13 ஆம் திகதிய கடிதத்தின் கட்டளைகளின் பிரகாரம் வருடாந்த இடமாற்ற மீளாய்வு குழுவின் தீர்மானத்தின் பின்னர் மீண்டும் மேற்கொள்கின்ற மேன்முறையீடுகள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முடிவு வழங்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள், கஷ்டங்கள் அல்லது திணைக்களத் தலைவர்களின் சிபாரிசின் மீது வருடாந்த இடமாற்ற தீர்மானங்களை உரிய தினத்திற்குப் பின்னர் பிற்போடப்பட மாட்டாது. வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பிலான மேன்முறையீடு ஒன்றிற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானங்கள், அத்தீர்மானங்களை தடுக்கின்ற கட்டளையொன்று இல்லாத பட்சத்தில் உடனடியாக அமுல்படுத்துதல் வேண்டும்.</u>

06. விளக்கமளிக்கும் விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவமொன்று (இ.சே/வ.இ.மா/04) இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த கோரிக்கைகள் பற்றி கவனத்திற் கொள்வதற்காக இந்த மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப தயாரித்துக் கொண்ட **விண்ணப்பங்களை 2017.10.11 ஆம் திகதிக்கு முன்னர்** அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறேன். ( விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும் போது ஒரு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தவும்) அன்றைய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது என்பதனையும் உரிய அலுவலர்களுக்கு அறிவித்தல் வேண்டும். மேலும் இடமாற்றப் பட்டியலில் குறித்த அலுவலரின் பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் இலக்கத்தை (Employee

No.) விண்ணப்பத்தில் குறிப்பிடாத விண்ணப்பங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

07. உங்கள் அமைச்சு / திணைக்களத்துக்கு வெளியே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களை **பதிலாள் வரும் வரை வைத்திருக்காது** உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையினைப் பொறுப்பேற்கக்கூடியவாறு விடுவிக்குமாறு அறியத்தருவதுடன், இந்த இடமாற்றங்களைத் தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும் எனவும் அறியத் தருகிறேன். முறையான அனுமதியின்றி இந்த இடமாற்றங்களை / புறக்கணிக்கின்ற அலுவலர்கள் தொடர்பில் 03/2017 சுற்றறிக்கையின் 9.8 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனையும் மேலும் அறிவிக்கின்றேன்.

08. மேலும், இறைவரித் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அதன் பிரதேச அலுவலகங்களில் பணிபுரிகின்ற 2018 ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றம் பெற்ற அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையை மற்றும் அலுவலக பணியாளர் சேவையை சார்ந்த அலுவலர்கள் தொடர்பாக இணைக்கப்பட்ட பிரதியீட்டு அலுவலர்கள் இறைவரித் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கு நேரடியாக சேவைக்கு அறிக்கையிடும்படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

09. மேலும் இறைவரித் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு பிரதியீட்டு அலுவலர்களாக 2018 வருடாந்த இடமாற்றம் பெற்ற சாரதிகள் சேவையின் அலுவலர்கள் நிதி அமைச்சில் கடமையினைப் பொறுப்பேற்றல் வேண்டும் என்பதுடன் பிரதேச அலுவலகங்களுக்கு பிரதியீட்டு அலுவலர்களாக இடமாற்றம் பெற்ற அச்சேவைகளின் அலுவலர்கள் உரிய பிரதேச அலுவலகத்துக்கு சேவைக்கு அறிக்கையிடும்படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம் / கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

**இ.சே/வ.இ.மா/04**

**2018 வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் மீளாய்வுக் குழுவிற்கு விளக்கமளிக்கும் விண்ணப்பப் படிவம்**

| | | | |
|---|---|---|---|
| பதவியும் வகுப்பும் | | இ-மனித வள இலக்கம் (இ.சே.ப.நா. இன் இடமாற்ற ஆவணத்தின் ஊழியர் இலக்கம்) | |

அ. தனிப்பட்ட தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. முதலெழுத்துக்களுடன் பெயர் -: | | | |
| 02 .பிறந்த திகதி :- YYYY/MM/DD | 03 .வயது-:( 2017.12.31 திகதியன்று) வரு...........மாதம்.........திகதி........... | 04தேசிய . அடையாள அட்டை இல:- | 05 .ஆண்/ பெண் :- F / M |
| 06 .நிரந்தர முகவரி -: | 07 .தற்காலிக முகவரி :- | 08.தொலைபேசி இலக்கம்<br>அலுவலகம் :-<br>தனிப்பட்ட :- | |
| 09. விவாகமானவரா என்பது -: | 1 0 .வாழ்க்கைத் துணையின் பெயர் -: | 11 .வாழ்க்கைத் துணையின் தொழில் மற்றும் சேவை நிலையம் -: | |
| 12 .பிள்ளைகளின் எண்ணிக்கை | 13 .அவர்களது வயது -: | 14 .கல்வி கற்கும் பாடசாலை -: | |

ஆ. சேவை பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| 15 .இ.சே.ப.நா. இன் நியமனக் கடிதத்தின் இலக்கம்:- | |
| 16 .தற்போதைய சேவை நிலையம் -: | 17. சேவை நிலையம் அமைந்துள்ள நகரம் -: |
| 18 .தற்போதைய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற திகதி :- YYYY/MM/DD | 19 .தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக் காலம் :- (2017.12.31 ஆந் திகதியன்று) வருடம் ..........மாதம் ............ நாட்கள்........ |
| 20. பயன்கிடைக்கும் சேவை நிலையம் ஒன்றில் கடமையாற்றியுள்ளீரா ? (விருப்புக்குரிய நிலையம்) | |

| 21 .அரச சேவையில் முன்னைய சேவைக் காலம் | சேவை நிலையம் | | சேவைக் காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | 1 | | | |
| | 2 | | | |
| | 3 | | | |
| | 4 | | | |
| | 5 | | | |

இ. இடமாற்றக் கோரிக்கை பற்றிய தகவல்கள் ( உரிய கூட்டினுள் √ அடையாளமிடவும்)

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளீரா | ஆம் | | இடமாற்றம் கிடைத்திருந்தால், கிடைக்கப்பெற்ற சேவை நிலையம் ......................................................... ......................................................... ............ |
| | | இல்லை | | |

**23.** மீளாய்வுக் குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தீர்மானம்

| | | |
|---|---|---|
| இடமாற்றத்தினை இரத்துச் செய்தல் | | இடமாற்றத்தினைத் திருத்துவதற்கு / புதிய இடமாற்றம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கோரப்பட்ட சேவை நிலையங்கள் |
| திருத்தியமைத்தல் | | **1** |
| | | **2** |
| புதிய இடமாற்றத்தினைப் பெற்றுக்கொள்ளல் | | **3** |
| 24 .இடமாற்றம் கோருவதற்கான காரணங்கள் -: | | |

மேல்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானவை என தெரிவித்துக் கொள்கின்றேன்.

.......................................                ........................................

திகதி                கையொப்பம்

ஈ. அமைச்சின் / திணைக்களத் தலைவரின் சிபாரிசு:

- மேலே பெயர் குறிப்பிட்ட அலுவலரின் 2018 வருடாந்த இடமாற்றம் தொடர்பாக மீளாய்வுக் குழுவிற்கு விளக்கமளிக்கும் விண்ணப்பப்படிவத்தில் பரிந்துரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

..........................................                ..............................................

திகதி                கையொப்பம்

உத்தியோகபூர்வ முத்திரை